2017 ஜூன் 14]
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

மருத்துவமனைக்குக் கூடுதல் வசதிகள்

***9200—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலைப் போக்குவரத்து நிறுவனம் மூலமாக நடத்தப்படும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அமைக்கவும், அவசரகால ஊர்தி மற்றும் அமரர் ஊர்தி வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, சாலைப் போக்குவரத்து நிறுவனம் மூலமாக நடத்தப்படும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், C.S.R. நிதி மூலமாக அமரர் ஊர்தி 7 இலட்சத்து 98 ஆயிரத்து 821 ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, இயக்குவதற்கு தயார் நிலையில் உள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், இருக்கையில் இல்லை. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]